# வேதனை மாளாது; செல்வமே! விழுத்துயர் மறையாது!

செல்வமே! கழகத்தின்
செம்மலே! கலைஞரின்
செல்லமே! மாறனின்
செவ்வேளே!தளபதி
அல்லலில் சாய்வதற்கு
அணையான
தடந்தோளே!
செல்வியின் செல்வமே!
சீரெழில் தந்தையே!
முல்லைபோல் தூயனே,
முத்துவேலர் பேரனே!
எல்லையில் அன்பனே,
எல்லோருக்கும் நண்பனே!

மெல்லவே என்றாலும்
மிளிர்ந்திடும்
கொள்கைவாளே!
நில்லாமல் சுழன்றிட்ட
நெடுங்கோளே! நீயின்று
இல்லையென்று
செய்திவர
இதயந்தான் வெடிக்கிறதே!

நல்லவன் உனைப்போல
நானிலத்தில்
காண்பதெங்கே?
ஒல்லுமோ உனைப்போல
உளமுயர்ந்தோர்
காண்பதற்கு?
நெல்லுக்குள் மணியாக
நிறைந்தவனே, களையான
புல்லுக்கும் கெடுதலைப்
புரியாத பூமகனே!
சொல்லுக்குச் சுடுமென்று
மென்மையாய்ச்
சொல்பவனே!
கல்லுக்கும் பெருகுமே
கழிவிரக்கக் கண்ணீர்தான்!
கயவனவன் காலனுக்குக்
கண்ணீர்தான்
இல்லையோ?

மல்லுக்கு நிற்காமல்
மாற்றாரை ஈர்க்கின்ற
வில்லுக்குப் போவதெங்கே?
வித்தகம் சாவதுண்டோ!

எப்போது அழைத்தாலும்
இரவுபகல் என்றாலும்
அப்போதும் பேசுவாய்;
அகில்மணம் வீசுவாய்!
இப்போது முயல்கின்றேன்;
இடைவிடாது அழைக்கின்றேன்;
தப்பாத மணிச்சத்தம்
தடையின்றி ஒலிக்கிறது,
எப்போதும் எடுக்கும்நீ
இன்றேனோ
எடுக்கவில்லை?

ஒப்பித்தான் பேசாமல்
உறக்கந்தான் பட்டாயோ!
தப்பித்தான் விட்டாயோ,
தணலில்எமை
விட்டாயோ,
கப்பித்தான் வந்தாலும்
காலனை முட்டாயோ?
செப்பியே அழுகின்றோம்
செல்வமே, மீண்டும்நீ
தப்பாமல் எழுவாயா?
தண்குரல் கொடுப்பாயா!

நட்பிற்கோர் இலக்கணம்
நாட்டிலே உண்டெனினும்
பெட்பான உனைப்போலப்
பேசுதற்கு யாருளார்?
தட்பவெப்பம் பார்த்தென்றும்
தண்மையாய்ப் பேசுகின்ற
ஒட்பத்தில் உயர்ந்தநீ
ஒருநாளும் பழக்கத்தை
விட்டுவிடாது இருப்பாயே,
வேண்டுவன செய்வாயே!
தொட்டுவிடாத்
தொலைவிலே துலங்கினும்
தொலைபேசி
எட்டுகிற இடத்திலே
எப்போதும் இருப்பாயே!

பட்டுப்போல் மென்மையனே,
பளிங்குபோல் உண்மையனே,
மொட்டுப்போல் எப்போதும்
முறுவலிக்கும் முகத்தினனே!
ஒட்டியிருந்து உறவாட
ஒல்லவில்லை என்றாலும்
எட்டியிருந் துரையாட
எப்போதும் தடையின்றிக்
கட்டுரைப்பாய், என்னுடைய
கவிதையும் புகழ்ந்துரைப்பாய்!

தொட்டுரைப்பாய், அரசியலைத்
துருவியும் தூண்டியும்
இட்டுரைப்பாய், எதிர்காலம்
எடுத்துரைப்பாய்,நேற்றுந்தான்
மட்டியாய்ப் பேசுகின்ற
மாநில ஆளுநரைக்
குட்டியே எழுதியவுன்
கூற்றினைநான் பாராட்ட,

வெட்கந்தான் அவர்க்கிலையே,
வேண்டுமட்டும் பண்பாகச்
சுட்டியே காட்டினாலும்
துரும்புக்கும் திருந்தலையே,
முட்டியே பார்த்தாலும்
முரண்டுக்கு வருந்தலையே,
திட்டியே பேசாமல்
தெளிவாக மொழிந்தாயே!
எட்டியே சென்றுவிட்டாய்
என்பதை நம்புவதா!
விட்டேனோ சென்றாயென
வேதனையால்
வெம்புவதா?

நான்போற்றும் மு.வ.வின்
நன்மறைவு நாளினிலே
ஊன்விட்டுப் போனாயே,
உலகுயிர் நீத்தாயே,
வான்விட்டுப் போனவொரு
வால்மீனாய் ஆனாயே,
கான்விட்டுப் போனவொரு
களிறாகி விட்டாயே,
தேன்சொட்டும் செந்தமிழைத்
தெவிட்டாமல் தொட்டாயே,
பான்முட்டும் பசுவாகப்
பலருக்கும் இட்டாயே,
ஏன்என்று விளக்குகின்ற
எழுத்துவிதை நட்டாயே,



தான்என்று தறுக்கியோரைத்
தமிழ்க்கோலால் சுட்டாயே!

மீன்முட்டும் கடல்போல
மேன்மேலும் கருத்தலைகள்
ஆனமட்டும் எழுப்பினையே,
ஆயிரம்வாள் எடுத்தனையே,
போனதுமேன்
புரியலையே,
பொழுதிங்கே
விடியலையே!

குற்றந்தான் சுமத்தினாலும்
கூண்டிலே நிறுத்தினாலும்
கொற்றந்தான் சீறினாலும்
கொலைவெறியே
பாய்ந்தாலும்
சற்றுந்தான் அஞ்சாத
தன்மானச் சிங்கமே!
உற்றுநீ பார்த்திட
ஒடுங்கிற்றுப் பொய்ச்சிங்கமே!
கற்றறிந்தாய் அண்ணாவின்
கலைஞரின் கதகதப்பில்
உற்றிருந்த வீரந்தான்
உதறியது மன்னிப்பை!
கற்பனை மனோகரனாய்
ஒடித்தெறிந்தாய்
கைவிலங்கை!
மற்போரில் வென்றவனாய்
மன்றத்தில் நின்றனை!
இற்றைக்கும் மறக்கத்தான்
முடியுமா இருவிழியால்!

மற்றுன்னை மாட்டிட
மருண்டது சித்தமே!
சிற்றறிவு நாயகிக்குத்
தெளிந்தது பித்தமே!
பற்றில்லாப் பெருமகனே,
பதவிநாடாத் திருமகனே,
நற்றவ மருமகனே,
நயச்செல்வி நாயகனே,
இற்றைக்கு மட்டுமல்ல
ஏழேழ் பிறவியிலும்
ஒற்றைக்கு ஒற்றையாய்
உயர்ந்தோங்கி எழுபவன்,
கொற்றவற்குக் கொற்றவனாய்க்
குலம்கூடித் தொழுபவன்!

புரந்தார்கண் நீர்மல்கப்
போயினையே, தளபதி
சுரந்திட்ட கண்ணீர்தான்
சொல்லுமே உள்ளத்தை!
இரந்தென்றும் ஒருவரிடம்
இறைஞ்சியே நிற்காத
வரமன்றோ பெற்றிருந்தாய்,
வளர்கின்ற தன்மானம்
நிரந்தரமாய் நாடியிலே
நிறைந்தவனே!
நெருப்பிலே
புரண்டாலும் கொள்கையில்
புறம்போகாப் பொன்னவனே,
திரண்டாலும் செல்வந்தான்
தீண்டாத மன்னவனே!
உருள்பெருந் தேர்த்
திருவாரூர்
ஒப்பில்லாச் செம்பியனே!
கரிகாலச் சோழனைக்
காத்தெடுத்து வளர்த்திட்ட
இரும்பிடர்த் தலையார்போல்
இருந்தாயே தளபதிக்கு!
கரும்பான சொற்களே
கனியிதழில் பொழியும்நீ
இரும்பான தூணாக
இருந்தாயே கலைஞர்க்கு!

அருந்தாத அமுதம்போல்
அத்தனை தூயவனே!
கருங்காலி கூட உனைக்
கைகூப்பித் தொழுவானே!
பொருந்தாத பேர்களும்
போற்றுவரே உனைக்கண்டால்!
திருந்தாத ஆட்களும்உன்
சிரித்தமுகம் கண்டுவிட்டால்
தருந் தீதை விடுவரே!
தடந்தேடி வருவரே!

பேராசிரியர்
**மா.செல்வராசன்**

செரு என்றால் போர்:அந்தச்
சிந்தனை உனையென்றும்
நெருங்கிய தில்லை,ஆனால்
நெடுங்கேடு கழகத்திற்கு
உருவாக்கும் கயவரை
ஒருநாளும் விட்டதில்லை!
திருவாக்குச் சிலந்தியாய்த்
தீட்டிய எழுத்துவலை
பெருமுத்து வேல்களாய்ப்
பிறங்கிடும் கருத்துவலை!

ஒருநாளில் உனைக்காண
ஓடிவர வேண்டுமென்று
பெருவிருப்புக் கொண்டுநான்
பேசிய போதெல்லாம்
ஒருநாளில் பார்ப்போமென்று
உரைத்தாயே, இன்றந்தத்
திருநாள்தான் இப்படியா
செல்வமே, அவலமாய்
வரவேண்டும்! கண்ணீரின்
வாரிதி ஆகவேண்டும்!

பூமாலை ஆயிரமாய்ப்
போட்டுன்னை வணங்குதலின்
தேமாவின் இனியனே
திரும்பவும்நீ எழுகவென்று
பாமாலை சூட்டவே
பாவலன் விழைகின்றேன்!
கோமானே, கழகத்தின்
கொள்கைவாள் குரிசிலே!
சாமான்யன் என்றண்ணா
சாற்றுதற்குச் சான்றானாய்;
ஓமான் பெருங்கடலில்
உயிர்விட்ட ஒப்பிலான்பேர்
மாமன்தான் வைத்தார்,நீ
மடியிலே தவழ்ந்ததும்
நாமம்தான் செல்வம்என
நானிலம் விளங்கிட!
ஆமாம், என்றுமே
அதுமெய்யாய்த் துலங்கிட!
ஈமந்தான் புகுந்தாயே,
யாமெல்லாம் கலங்கிட,
பூமிதான் அதிர்ச்சியில்
புரண்டிங்குக் குலுங்கிட!

செல்வத்துக் கேற்றவொரு
செல்வினைக் கலைஞரன்று
சொல்லிய சொல்லென்றும்
துலங்கிடும் சுடரன்றோ!
எல்லாமும் இருந்தும் நின்
இன்னுயிர் காணாமல்
புல்லியுனை அழுதழுது
பொழிந்துநீர் புலம்பிய
செல்விகுரல் கேட்கலையோ!
திறந்துவிழி பார்க்கலையே!
நல்லவன்நீ நாவசைத்து
நாலுசொல் பேசலையே,
பல்லவன் சிற்பமாய்ப்
படுத்துதான் விட்டாயே!

ஆதிமுதல் கலைஞருடன்
அரசியலில் துணையிருந்தும்
வாதிட்டுப் பார்த்ததில்லை;
வரிசைகேட்டு ஆர்த்ததில்லை;
ஓதிய கேட்பதன்றி
ஒருநாளும் பிறழ்ந்ததில்லை;
தோதாக இருந்ததன்றித்
துணையாக வளர்ந்ததன்றிக்
காதாக விரிந்ததன்றிக்
கண்ணாக விழித்ததன்றி

நீதாகம் கொண்டென்றும்
நின்றதில்லை பதவிக்கு;
ஏதொன்றும் கேட்டதில்லை:
எதையுமே வேட்டதில்லை;
ஈதொரு புதுமையே,
இளங்கா அடிகள்போல்
தீதறுக எனவாழ்ந்த
தியாகச் செல்வமே!
ஆதரவாய் எல்லோர்க்கும்
அன்போடு இருந்தவனே!
நாதம்போல் இனிக்கின்ற
நல்லிசை நாவினனே,
ஏதங்கள் இல்லாநீ
ஏகியதும் சரிதானா!
மாதங்கள் போனாலும்
ஆண்டுகள் மறைந்தாலும்
போதிங்கே விரைந்தாலும்
பருவங்கள் புரண்டாலும்
நீதங்கம், என்றென்றும்
நெஞ்சிலே அணியாவாய்!
ஆதவன் என்றும்நீ,
அணைதலும்
உண்டோ சொல்!

மீதளவு வாய்ப்பிருந்தும்
மேடைக்கு வாராத
சாதனை யாளனே!
சாற்றினும் போற்றினும்
வேதனை மாளாது;
விழுத்துயர் மறையாது!



திருப்பூர் மாவட்டம், மடத்துக்குளம் வட்டம், கிருஷ்ணாபுரம் அமராவதி கூட்டுறவு சர்க்கரை ஆலை வடிப்பாலை பிரிவில் எரிசாராய உற்பத்தியை தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் கழக உயர்நிலை செயல் திட்டக்குழு உறுப்பினர் மு.பெ.சாமிநாதன், கழக மகளிர் அணி துணைச் செயலாளர், மனிதவள மேலாண்மைத்துறை அமைச்சர் என்.கயல்விழி செல்வராஜ் துவக்கி வைத்தனர். இதில் மாவட்ட ஆட்சித்தலைவர் தா.கிறிஸ்துராஜ், மாவட்டச் செயலாளர், மாநகராட்சி 4ம் மண்டலத்தலைவர் இல.பத்மநாபன், மாவட்ட அவைத்தலைவர், மடத்துக்குளம் சட்டமன்ற முன்னாள் உறுப்பினர் இரா.ஜெயராமகிருஷ்ணன், அமராவதி கூட்டுறவு சர்க்கரை ஆலை இணைப்பதிவாளர், செயல் ஆட்சியர் மீனா அருள், வடிப்பாலை பிரிவு துணை ஆட்சியர் டி.மாதவன் உள்பட மாவட்ட, ஒன்றிய, கிளை கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள், கழக துணை அமைப்புக்களின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் பலர் கலந்து கொண்டனர்.



விக்கிரவாண்டி சட்டமன்ற தொகுதி காணை தெற்கு ஒன்றியம் கருங்காலிப்பட்டு ஊராட்சியைச் சேர்ந்த கழக நிர்வாகி சாமிக்கண்ணு என்பவரது வீடு மின் கசிவு காரணமாக தீயில் எரிந்தை அறிந்து விக்கிரவாண்டி சட்டமன்ற உறுப்பினர் அன்னியூர் சிவா நேரில் சென்று பார்வையிட்டு ஆறுதல் கூறி நிவாரணத்தொகை மற்றும் வேட்டி சேலை, அரிசி, காய்கறி, மளிகை பொருட்கள் உள்ளிட்ட அத்தியாவசிய பொருட்களை வழங்கினார். உடன் மாவட்ட ஊராட்சிக்குழு தலைவர் ம.ஜெயச்சந்திரன், மாவட்ட பொருளாளர் இரா.ஜனகராஜ், ஒன்றிய கழக செயலாளர்கள் வழக்கறிஞர் கல்பட்டு வி.இராஜா, ஆர்.முருகன், முருகன், ரவிச்சந்திரன், வட்டாட்சியர் கனிமொழி, வருவாய் ஆய்வாளர், வட்டார வளர்ச்சி அலுவலர்கள் சிவக்குமார், சீனுவாசன், மாவட்ட கவுன்சிலர் சிவக்குமார், ஒன்றிய கழக நிர்வாகிகள் பழனி, செல்வராஜ், மதன், நாராயணசாமி,சிவராமன், மாவட்ட ஆதிதிராவிடர் அணி தர்மலிங்கம், ஊராட்சி மன்ற தலைவர் அன்பழகன், கிளை கழக செயலாளர்கள் சக்கரவர்த்தி, வெங்கடேசன், சத்தியராஜ், பிரதிநிதி நாராயணன், தகவல் தொழில் நுட்ப அணி கதிரவன், ஒன்றிய இளைஞரணி துணை அமைப்பாளர் மணிபாலன் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் உடனிருந்தனர்.